RTROP .No.139 OF 2021 – 10,01,2023

CW1 – அன்வர்

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் சேலம் ஜாமியா மசூதி பெயரில் இருந்தது. ஜாமியா மசூதிக்கு முத்தாவல்லி நியமணம் செய்யப்பட்டிருக்கிறார். அதற்கான எக்ஸ்டன்சன் உத்தரவும் (Ex.C9) தாக்கல் செய்துள்ளேன். என்னை முத்தாவல்லியாக நியமித்த உத்தரவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது இம்மனுவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நில ஆர்ஜித அலுவலரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி Ex.C9 ஆவணத்தைபெறுவதற்கு தாமதம் ஆகிவிட்டது.அதற்குள் நில ஆர்ஜித அலுவலரிடமிருந்து மனு இங்கு வந்துவிட்டது. 2 முதல் 5 கோரிக்கைதாரர்கள் ஜாமியா மசூதிக்கு சம்மந்தப்பட்ட சொத்தில் சுவாதினத்தில் இருக்கிறார்களா என்றால் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தற்போது சாட்சி மேற்படி நபர்கள் மனு சொத்தில் அவர்கள் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். மனு சொத்து இனாம் நிலம் என்றும் 1959 முதல் 2 முதல் 5 கோரிக்கைதாரர்கள் அந்த நிலத்தில் குடியிருந்து வருவதாக கோரிக்கை வைக்கிறார்கள் என்றால் செட்டில்மெண்ட் தாசில்தார், 1968 ல் மனுசொத்திற்கு மசூதி பெயரில் பட்டா வழங்கினார். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் இனாம் என்றும்

நிலத்தை பொருத்த வரை இனாம் ரிஜிஸ்டர்படி சதாசிவம் அய்யர்தான் அனுபவித்து வந்தார் என்றால் தவறு. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் மசூதி பெயரில் பட்டா மாறுதல் செய்யப்படாமல் இருந்து வருகிறது என்றால் டவுன் சர்வே ரிஜிஸ்டர்படி(Ex.C2) மசூதி பெயரில் மாறிவிட்டது. டவுன் சர்வே செய்வதற்கு முன்பு பட்டாவில் பெயர் மாற்றம் செய்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் செட்டில்மெண்ட் தாசில்தார் என் பெயருக்கு பட்டா வழங்கி உள்ளார். செட்டில்மெண்ட் தாசில்தார் வழங்கிய பட்டாவை தாக்கல் செய்யவில்லை. ஆனால் அவர் பட்டா வழங்க பிறப்பித்த உத்தரவை தாக்கல் செய்துள்ளேன். அ பதிவேட்டில் (Ex.C4) மஜீத் என்றும் தேவதாயம் என்று கண்டுள்ளது. மனுசொத்து மஜீத்திற்கு சம்மந்தப்பட்டது என்பதற்கான பட்டாவை தாக்கல் செய்துதான் இழப்பீட்டு தொகையை பெற்றுக்கொள்ள இயலும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- R.Kalaimathi,

Principal District Judge, Salem.